Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

புதன்கிழமை ஆகஸ்ட் 28, 2023 | ஒளி: 10 கதிர்: 038 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE

# 700 வேட்பாளர்கள் பறந்து விட்டனர்



உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்புமனு தாக்கல் செய்த சுமார் 700 வேட்பாளர்கள் பொருளாதார பிரச்சினை காரணமாக வெளிநாடு சென்றுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தொடர்ச்சி P2

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு

# “முழு அதிகாரம்

சுதந்திரமானதும் நிதியானதுமான தேர்தலுக்கு அரசாங்கத்தின் முழு அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்திய பிரதமர் தினேஷ் குணவர்தன, தேர்தல்கள் ஆணைக்குழு ஒரு சுயாதீனமான நிறுவனமாகும். தேர்தல் தொடர்பான அனைத்து தீர்மானங்களும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் என சுட்டிக்காட்டினார். வரவு-செலவுத் திட்ட ஏற்பாடுகளை அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும் ஏனைய விடயங்களை ஆணைக்குழுவினால் செய்ய வேண்டுமெனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழு பிரதமர் தினேஷ் குணவர்தனவை அலரி மாளிகையில் செவ்வாய்க்கிழமை (27) சந்தித்தனர்.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழுவின் தலைவர் ஜோஸ் இக்னாசியோ சான்செஸ் அமோர், தனது கண்காணிப்பு பணியை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் அளித்த ஆதரவிற்கு நன்றி தெரிவித்தார். தொடர்ச்சி P2



# ரணிலின் அழைப்பு; ரஞ்சித் இணக்கம்

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள ஒப்பந்தம் குறித்தும், அதனுடன் தொடர்புடைய ஏனைய விடயங்கள் குறித்தும் சர்வதேச நாணய நிதியத்துடன் வீடியோ கலந்துரையாடலை மேற்கொள்ளத் தான் தயார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த வீடியோ கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட தரப்பினருக்கு இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்க முடியும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சி மாநாட்டின் போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கருத்து தெரிவித்திருந்தார். அதற்கு பதிலளிக்கும் வகையில், விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார பிரச்சினையைப் புரிந்து கொண்டு, சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடலை மேற்கொள்ள வேண்டும் என்று 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமே ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்திருந்தது. தொடர்ச்சி P2



# டயனாவுக்கு பிணை

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (27) உத்தரவிட்டுள்ளது.

இரட்டைக் குடியுரிமை வைத்திருத்தமை தொடர்பான குற்றச்சாட்டுகளின் கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும், சட்டமா அதிபரால் அவருக்கு எதிராக முறையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாததைத் அடுத்தே பிணை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன, 25,000 ரூபாய் ரொக்கப்பிணை மற்றும் ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகள் என நிபந்தனை பிணைகளை விதித்தார். தொடர்ச்சி P2



# ரணிலின் விஞ்ஞாபனம் வியாழன் வெளிவரும்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம், கொழும்பு-தாஜ் சமுத்ரா ஹோட்டலில் வியாழக்கிழமை (29) வெளியிடப்படவுள்ளது. “இலங்கையால் முடியும்” என்ற தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் இந்தக் கொள்கை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து விடுவித்து பொருளாதார சுபீட்சத்திற்கு இட்டுச் செல்வதற்கான அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், படிப்படியாக நாட்டை அபிவிருத்தியடைந்த நிலைக்குக் கொண்டு செல்லும் திட்டங்களும் கொள்கை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. தொடர்ச்சி P2



# நல்லூர் தீர்த்தத்துக்கு ‘விடுமுறை’ கோரிக்கை

நல்லூர் தீர்த்த தினமான செப்டெம்பர் 2ஆம் திகதியன்று, விடுமுறை வழங்குமாறு சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

மீன்பிடி மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் ஆகியோரிடமே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். தொடர்ச்சி P2



# இராதாவும் உதயாவும் ரணிலுடன் இணைவர்


ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுச்சாமி இராதாகிருஷ்ணன், எம். உதயகுமார் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கவுள்ளமை தொடர்பிலான அறிவிப்பை வெளியிடுவார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (27) ) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார். அவர்கள் இருவரும், எதிர்வரும் செப்டெம்பர் 10ஆம் திகதி தங்களுடைய ஆதரவைத் தெரிவிப்பர் என்றார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினுடாகவே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான 1,700 ரூபாய் சம்பளம் சாத்தியமாகி இருப்பதாகவும், எதிர்வரும் செப்டெம்பர் 10ம் திகதி அந்த கொடுப்பனவு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் நம்பிக்கை வெளியிட்டார்.

இதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுச்சாமி இராதாகிருஷ்ணன், எம்.உதயகுமார் ஆகியோர் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு வழங்குவார்கள் என்றார்.



# மேட்ச் பிக்சிங்: ஆகாஷுக்கு சிறை




இந்திய ராயல் பஞ்சாப் அணியின் முகாமையாளராக இருந்தபோது போட்டிகளைக் காட்டிக்கொடுக்குமாறு (மேட்ச் பிக்சிங்) இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் பிலிம்ஸ்டெட் மற்றும் நியூசிலாந்து வீரர் நில் ப்ரூவுக்கு அழுத்தம் கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட கிரிக்கெட் மேலாளர் பெச்சலோடியா ஆகாஷுக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி தர்ஷிகா தீர்ப்பளித்தார். தொடர்ச்சி P2

# மானியங்கள், சம்பள உயர்வுகள் தேர்தல் சட்டங்களை மீறுவதாகும்

2024 ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் பிரச்சாரத்திற்காகப் பொது வளங்களைத் தவறாகப் பயன்படுத்துவதைக் கண்காணித்து வரும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) நிறுவனமானது, தேர்தலுக்கு முந்தைய மானியங்கள் மற்றும் சம்பள உயர்வுகள் வழங்குதல் தொடர்பான அரசாங்கத்தின் அண்மைக்கால தீர்மானங்கள் தேர்தல் சட்டங்களைத் தெளிவாக மற்றும் வேண்டுமென்றே மீறுவதாக அமைகின்றன எனச் சுட்டிக் காட்டுகின்றது. தொடர்ச்சி P2

# பௌசிக்கு சிறை



பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையை விதித்து தீர்ப்பளித்துள்ளது. அவர் அனர்த்தமுகாமைத்துவ இராஜாங்க அமைச்சராக 2010ஆம் ஆண்டு பதவி வகித்த காலப்பகுதியில், அமைச்சு அலுவல்களுக்காக ஜப்பானினால் வழங்கப்பட்ட வாகனத்தை, தொடர்ச்சி P2

# 8 மாதங்களில் 341 மீனவர்கள் சிறைப்பிடிப்பு



எஸ்.ஆர்.லெம்பேட்

தமிழக மீனவர்களின் ஒரு விசைப்படகை சிறைபிடித்து அதிலிருந்த 8 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை 341 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தி கடற்பகுதியில் சூறைக் காற்று வீசியதால் கடந்த ஒரு வாரக் காலமாக ராமேஸ்வரம் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.

இந்நிலையில், திங்கட்கிழமை(26) வானிலை இயல்பு நிலைக்கு திரும்பியதைத் தொடர்ந்து, ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து சுமார் 450 விசைப்படகுகளில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். செவ்வாய்க்கிழமை (27) அதிகாலை எட்டு பேர் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, எல்லை தாண்டியதாகக் குற்றஞ்சாட்டி ரோந்திலிருந்த இலங்கை கடற்படையினர் அவர்களைக் கைது செய்தனர். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு

# "முழு அதிகாரம்

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் 2022இல் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் ஜனநாயகத்திற்கு புதிய பலத்தை வழங்கும் என்றும் சுட்டிக்காட்டினார். ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளித்து, இலங்கை சரியான பொருளாதாரப் பாதையில் செல்வதற்கு இந்தத் தேர்தல் முக்கியமானதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியம் இதற்கு முன்னர் ஆறு தடவைகள் இலங்கையில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், கடைசியாக 2019 ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்றியுள்ளது. இந்த ஆண்டு இலங்கையில் தேர்தல் கண்காணிப்பு நெறிப்படுத்தல் பணிகள் நம்பகத்தன்மையுடனும், வெளிப்படைத்தன்மையுடனும், அனைவரின் பங்கேற்பையும் அர்ப்பணிப்பையும் உறுதிசெய்வதுடன், அமைதியான தேர்தலாக இருக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனா தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியம் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளைப் பார்வையிட நாடு முழுவதும் 26 கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தவுள்ளது. தேர்தல் முடிந்த உடனேயே இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டு அதன் பின்னர் முழுமையான அறிக்கையும் சமர்ப்பிக்கப்படும்.

பொருளாதார நிலைமை குறித்தும் இருதரப்பும் கலந்துரையாடியதுடன், பொருளாதார நெருக்கடியின் போது, ஸ்பெயின், கிரீஸ் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளின் அனுபவங்களிலிருந்து இலங்கை பாடம் கற்றுக்கொண்டதாக பிரதமர் தெரிவித்தார்.

ஸ்பெயின் நாட்டவரான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் தலைவர். ச்சேஸ் அமோர், பிரதமர் குணவர்தனவின் அரசியல் வாழ்க்கை பற்றித் தான் மிகவும் ஈர்க்கப்பட்டதாகவும், 2012இல் ஸ்பெயின் மன்னர் அப்போதைய அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கு வழங்கிய 'Orden de Isabel' விருது அவரது நாடு வழங்கும் உயர்ந்த விருது என்பதையும் நினைவு கூர்ந்தார்.



# 700 வேட்பாளர்கள் பறந்து விட்டனர்

மேலும், கிட்டத்தட்ட இருபது வேட்பாளர்கள் இறந்து விட்டதாக அதே ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன.

இது தவிர, பல்வேறு காரணங்களால் கிட்டத்தட்ட ஐந்நூறு வேட்பாளர்கள் கட்சி மாறியுள்ளதாகத் தேர்தல் அதிகாரிகளுக்குத் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்கவிடம் கேட்டபோது, உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்புமனு தாக்கல் செய்தவர்களின் விபரங்களைக் கண்டறியும் விசேட நடவடிக்கை எதிர்வரும் காலங்களில் அமுல்படுத்தப்படும் என தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர், வேட்பாளர்கள் தொடர்பில் ஆராயப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கு மாவட்டச் செயலகங்கள் மற்றும் அந்தந்த அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறலாம் என தேர்தல் ஆணையம் நம்புகிறது.

இந்த உண்மைகளால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் பல நடைமுறை சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தேர்தல் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான 8,711 வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு 2023 ஏப்ரல் மாதம் வேட்புமனுக்கள் கோரப்பட்டன, அதில் 80,672 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

# ரணிலின் விஞ்ஞாபனம் வியாழன் வெளிவரும்

இலங்கை மக்கள் அனைவருக்கும் நல்லதொரு நாட்டைக் கட்டியெழுப்புவது கொள்கைப் பிரகடனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வரலாற்றில் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட இலங்கை படிப்படியாக மீண்டு வந்ததன் பின்னர் மற்றுமொரு அடியை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



# நல்லூர் தீர்த்தத்துக்கு 'விடுமுறை' கோரிக்கை

இலங்கை நாட்டில் இலங்கை வாழ் மக்கள் மட்டுமல்ல, உலக வாழ் இந்துக்களும் நல்லூர் திருவிழாவில் கலந்து தங்களது பக்திபூர்வமான வேண்டுதலைச் செய்து வருகின்றார்கள். இந்நிலையில் 25 நாட்களாக விரதம் இருந்து நல்லூர் முருகனை மனம் உருகி வேண்டி நிற்கும் பக்தர்கள் செப்டெம்பர் 2ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் தங்களது விரதத்தினை பூர்த்தி செய்து கொள்வார்கள்.

இந்த விரத பூர்த்தி தினமான தீர்த்த தினத்தை யாழ். மாவட்டத்தினருக்கு, பாடசாலை உட்பட அரச ஊழியர்களுக்கு குறிப்பாக இந்துக்களுக்கு விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டும் என்றே கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இந்த கோரிக்கையின் பிரதிகள் வடமாகாண தலைமைச் செயலாளர் எல்.இளங்கோவன், யாழ். கல்வி அமைச்சின் செயலாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், எம்.பிராதீபன் மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது .

மேலும், நல்லூர் திருவிழாவானது இலங்கை நாட்டின் ஒரு தேசிய திருவிழாவாகச் சகல இன மக்களாலும் பக்திபூர்வமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்த வகையில், இந்த தீர்த்த திருவிழா அன்று புண்ணிய விருதத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அத்தினத்தை விடுமுறை தினமாக அறிவித்தால் இந்து மக்கள் நன்றி உடையவர்களாக இருப்பார்கள் எனவும் குறித்த கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரணிலின் அழைப்பு; ரஞ்சித் இணக்கம்

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் கட்சியின் பொருளாதாரக் கொள்கை வகுப்பாக்க உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி இருக்கிறது.

அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சாதாரண மக்களைப் பாதிக்கின்ற நிபந்தனைகள் குறித்து, அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி ஆலோசனைகளை முன்வைத்திருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகள் மற்றும் நிபந்தனைகள் என்று நாட்டு மக்களை அழுத்தங்களுக்கு உள்ளாக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் செயற்பாடானது சர்வதேச நாணய நிதியத்தின் உண்மையான கருத்தாக இருக்கவில்லை என்பது எமக்குத் தெரியும்.



எனவே, எந்த சந்தர்ப்பத்திலும் சர்வதேச நாணய நிதியத்துடன் எவ்வாறான கலந்துரையாடலாக இருந்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி அதற்குத் தயார் என்று தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# மேட்ச் பிக்சிங்: ஆகாஷுக்கு சிறை




இந்த வழக்கின் தீர்ப்பு, செவ்வாய்க்கிழமை (27) வழங்கப்பட்டது. மேலும், ஐந்தரை மில்லியன் ரூபாய் என இரண்டு தொடர்புடைய குற்றச்சாட்டுகளுக்கு தலா 11 மில்லியன் ரூபாய் அபராதம் விதித்தார்.

கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் ஸ்டேடியத்தில் நடைபெற்ற "லெஜண்ட் டிராபி 2024" கிரிக்கெட் போட்டியில் பணத்திற்காக வெளிநாட்டு வீரர்களை ஏமாற்றியதாக இரண்டு அதி குற்றச்சாட்டுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த இரண்டு வழக்குகளின் விசாரணை தீர்ப்பிலேயே மேற்கண்டவாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க விளையாட்டு குற்றங்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்தக் குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டன. வழக்கில்,

அரசு தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி உதார கருணாதிலக்கவும், பிரதிவாதி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பனவும் ஆஜராகியிருந்தனர்.

# டயனாவுக்கு பிணை

நீதிமன்ற அழைப்பின் பேரில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தனது சட்டத்தரணியுடன் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (27) முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பௌசிக்கு சிறை

தனது தனிப்பட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தினார் என அவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட நிலையில், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க இந்த தீர்ப்பை, செவ்வாய்க்கிழமை (27) வழங்கினார். அத்துடன், இந்த வழக்கில் அவருக்கு 4 இலட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரின் முதுமை மற்றும் குற்றத்தை முன்கூட்டியே ஒப்புக்கொண்டமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, குற்றம் சாட்டப்பட்டவருக்கு விதிக்கப்பட்ட கடூழிய தண்டனையை இடைநிறுத்த நீதிபதி முடிவு செய்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான முஜிபுர் ரஹ்மான், உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக பதவி விலகியதன் பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, ஏ.எச்.எம்.பௌசி தெரிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மானியங்கள், சம்பள உயர்வுகள் தேர்தல் சட்டங்களை மீறுவதாகும்

அனைத்து அரச ஊழியர்களுக்கும் 2025 ஜனவரி முதல் ரூ. 25,000 வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுடன் சேர்த்து, 24 முதல் 35 சதவீத சம்பள உயர்வுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அரசாங்கம் கடந்த வாரம் அறிவித்தது. இலங்கையில் சுமார் 1.5 மில்லியன் பொதுச் சேவைப் பணியாளர்கள் உள்ளனர். அவர்களில் கிட்டத்தட்ட அனைவரும் வாக்காளர்கள். இது தவிர, ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ரூ.12,000 வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வழங்குவதாகவும் அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ளது. மீனவர்களுக்கு எரிபொருள் மானியமும், தேயிலை பயிர்ச்செய்கையாளர்களுக்கு உர மானியமும் ஆகஸ்ட்22 முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியமும் அண்மையில் ரூ. 1,700ஆக உயர்த்தப்பட்டது.

புதிதாக வாக்குறுதியளிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் சம்பள உயர்வுகளுக்கான நிதியை எந்த வழியில் திரட்டப் போகிறது என்பதை அரசாங்கம் எங்கும் விளக்கவில்லை. எவ்வாறாயினும், பொதுமக்கள் அல்லது பொது அதிகாரிகளுக்கான மானியங்கள், சம்பள உயர்வுகள் அல்லது நன்மைகளை வழங்குவதை எதிர்க்கவில்லை, மாறாக அவை செயல்படுத்தப்படும் நேரத்தை TISL வலியுறுத்துகிறது. தேர்தல் காலத்தில் ஒரு வேட்பாளரை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, ஊக்குவிக்கவோ அல்லது தடுக்கவோ பொது வளங்களைப் பயன்படுத்துவது சட்டவிரோதமானது என்று சட்டம் தெளிவுபடுத்துகிறது.

இந்த முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக TISL தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கணிசமான எண்ணிக்கையிலான முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளது. ஆகஸ்ட்23, வெள்ளிக்கிழமை வரை, பொது வளங்களைத் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக 80 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை TISL சமர்ப்பித்துள்ளது. ஆணைக்குழுவின் தலையீட்டினால் இவ்வாறான பல மீறல் செயற்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆணைக்குழு துரித நடவடிக்கைகளை எடுத்தமைக்காக TISL பாராட்டுகிறது.

நாட்டின் ஒரு முக்கிய தருணமான ஜனாதிபதித் தேர்தலை அணுகும் போது, பொது நிதியைத் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் குறிப்பிட்ட வேட்பாளர்களை ஆதரிப்பதற்காக அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பாக அதிகரித்து வரும் குற்றச்சாட்டுகள் குறித்து TISL ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் 2394/56 சுற்றறிக்கைகள் / வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களைத் தெளிவாக மீறுவதாகும்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலின் நேர்மையை குறை மதிப்பிற்கு உட்படுத்தும் நடைமுறைகளைக் குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு TISL கடுமையாக வலியுறுத்துகிறது.

ஜனாதிபதி வேட்பாளராக இருக்கும் தற்போதைய ஜனாதிபதியின் தலைமையிலான அரசாங்கத்தினால் இவ்வாறான செயற்பாடுகளைத் தொடர்வது, தனிப்பட்ட அரசியல் இலாபங்களுக்காக நிறைவேற்று அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்வதாகும். TISL நிறுவனமானது, வேட்பாளர்களுக்கான சம வாய்ப்பை இழக்கும் அனைத்து செயல்களையும் கண்டிக்கிறது.

தேர்தல்களின் முக்கியமான காலப்பகுதியில் தேர்தல் சட்டங்களை மீறும் எந்தவொரு நடவடிக்கையும் பிரஜைகளுக்கு சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் வாக்களிக்கும் உரிமையை வழுவிப் போகச் செய்வதோடு அதன் மூலம் ஜனநாயக செயன்முறையை சிதைக்கின்றது. நியாயமான மற்றும் சுதந்திரமான தேர்தல்களை உறுதி செய்வதற்கும் ஜனநாயகக் கொள்கைகளை நிலைநிறுத்துவதற்கும் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்குமாறு TISL கோரிக்கை விடுக்கிறது.

# 8 மாதங்களில் 341 மீனவர்கள் சிறைப்பிடிப்பு

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்கள் இன்று பிற்பகல் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டு வவுனியா சிறையில் அடைக்கப்படுவார்கள் என தெரிகிறது.

முன்னதாக கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை 46 தமிழக மீனவர்களின் படகுகளை சிறைபிடித்து 341 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், இலங்கை கடற்பரப்பினுள் சட்ட விரோதமாக நுழைந்து மீன் பிடித்த நிலையில் தலைமன்னார் கைது செய்யப்பட்ட ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்களையும் செப்டெம்பர் 5 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை(27) உத்தரவிட்டது.



# புத்தளத்தில் காரியாலயம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் முகமாக புத்தளம் மஸ்ஜித் வீதியில் புதிய காரியாலயம் ஒன்று திங்கட்கிழமை (26) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மஸ்ஜித் வீதியில் அமைந்துள்ள சமூக சேவையாளரும், ஜனாதிபதி ஆதரவாளருமான எம்.என்.எம். நுஸ்கியின் இல்லத்திலேயே இந்த புதிய காரியாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

# தப்பியோடிய கைதிக்கு வலை

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த தீர்ப்பு வழங்கப்பட்ட கைதி ஒருவர் நீதிமன்றத்தின் கழிவறை கூரையை உடைத்துக் கொண்டு தப்பியோடியுள்ள சம்பவம் திங்கட்கிழமை (26) இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

ஏறாவூர் நீதிமன்ற வழக்கொன்றில் நான்கு வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த கிளிநொச்சியை சேர்ந்த 30 வயதுடைய பாலசுந்தரம் கோபிநாத் என்ற கைதியே இவ்வாறு தப்பியோடியுள்ளார்.

வேறொரு வழக்கொன்றிற்காக களுவாஞ்சிகுடி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், நீதிமன்ற வளாகத்தில் உள்ள கழிவறைக்குச் சென்ற கைதி, கழிவறை கூரையை உடைத்துக் கொண்டு தப்பியோடியுள்ளதாகவும் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் களுவாஞ்சிகுடி பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# “ரணில் இல்லையேல் வரிசையில் இணையும்”

அடுத்த ஐந்து வருடங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை இந்த நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்காவிட்டால், வீதிகளில் மக்கள் கொல்லப்பட்டு, மதத் தலங்கள் தாக்கப்பட்டு, நீதிமன்றங்கள் மூடப்பட்டு, அரசியலமைப்பு எரிக்கப்பட்டு, இரத்தம் நிறைந்த மற்றொரு பங்களாதேஷாக இலங்கை மாறுமென தெரிவிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க, உலகின் அழிவடைந்த நாடுகள் வரிசையில் இணைந்துகொள்ளும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

அதனால் தனது தனிப்பட்ட நிலைப்பாடுகளை ஒதுக்கி வைத்து விட்டு இந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட தீர்மானித்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தேர்தல் பிரசார அலுவலகத்திற்கு



திங்கட்கிழமை(26) உள்ளூராட்சி பிரதிநிதிகளுடன் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தனது கட்சியை விட்டு விலகும் நடவடிக்கையல்ல எனவும் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் இந்த நேரத்தில் அனைவரும் சரியான தீர்மானம் எடுக்க வேண்டிய தேவை உள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், “இந்த நாட்டில் ஜனநாயகம், மனிதாபிமானம், நீதி, சட்டம், நியாயம் புதைந்து கிடக்கும் இறுதித் தருணத்தில் ஜனநாயகச் சுடரும் அணையவிருந்த போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனநாயகத்தையும் நாட்டையும் நாட்டின் பொருளாதாரத்தையும் சட்டத்தையும் பாதுகாத்தார்.

எனது வாழ்நாள் முழுவதும் அவருடன் அரசியல் ரீதியாக முரண்பாடுகளைக் கொண்டிருந்த போதும், 2022இல் ரணில் விக்ரமசிங்கவை இந்நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்க பாராளுமன்ற உறுப்பினராக வாக்களித்தேன். அன்று மொட்டுக் கட்சியில் உள்ள அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது வாக்குகளைப் பயன்படுத்தி அவரை வெற்றிபெறச் செய்தனர். ஜனநாயகச் சுடர் அணையவிருந்த இக்கட்டான நேரத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் மட்டுமே அந்தப் பொறுப்பை ஏற்றிருக்க முடியும் என்பதை நாம் அறிந்திருந்தோம்.

அன்று அவர் ஜனாதிபதியாகப் பதவி ஏற்காமலிருந்திருந்தால், அடுத்த 24 மணி நேரத்தில், ஜனநாயகத்தின் உச்சமாக விளங்கும் பாராளுமன்ற எரிக்கப்பட்டு, இன்று பங்களாதேஷ் எதிர்கொள்ளும் நிலைக்கு இலங்கை வந்திருக்கும். ஆனால், 24 மணி நேரத்தில் இதையெல்லாம் கட்டுப்படுத்தி ஜனநாயகத்தையும் சட்டத்தையும் பாதுகாத்தார் என்றார்.

# வாக்களிக்க செல்ல முடியாதவர்களுக்கு

உடல் வலிமை இழப்பிற்குட்பட்ட எவரேனுமொருவர் நடந்தோ, இலங்கை பொதுப் போக்குவரத்து வாகனமொன்றிலோ தமது வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்வதற்கு முடியாதவராக இருப்பின், குறித்த வாக்களிப்பு நிலையத்திற்குப் போய்வருவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

தங்களது பிரதேசத்திற்குரிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் தானாகவோ அல்லது தனது சார்பாக மற்றொருவரோ, குறித்த நபர் வேட்பாளர், தேர்தல் முகவர். அதிகாரம் பெற்ற முகவர், பிரதேச முகவரொருவராக அல்லாத வேறொருவரினால் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்க முடியும்.

இந்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை https://elections.gov.lk/ இணையத்தளத்திலும் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை செப்டெம்பர் 14ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ உரிய தெரிவத்தாட்சி அலுவலரிடம் (மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்) அல்லது மாவட்ட பிரதி அல்லது உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு (மாவட்டத் தேர்தல் அலுவலகம்) சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பத்தை சமர்ப்பிப்பவர், வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்ல முடியாதென்பதை நிரூபிக்கக்கூடியவாறு, பதிவுசெய்யப்பட்ட வைத்தியரொருவரின் (மேற்கத்திய, உள்நாட்டு) வைத்தியச் சான்றின் மூலம் தமது விண்ணப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்டிருஏப்பின் உதவியாக அமையும்

வலிமையிழப்புக்குட்பட்ட மற்றும் பார்வை இழப்பிற்குட்பட்ட நபர்களுக்காகத் தேர்தல் ஆணைக்குழுவால் விநியோகிக்கப்பட்ட 10 வருடங்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட தற்காலிக அடையாள அட்டையுடையவர்கள் வைத்திய சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் அவசியமில்லை.

# சாதனையாளர்கள் கௌரவிப்பு





■ எம்.யூ.எம்.சனூன்

வடமேல் மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 2024 கால்பந்தாட்ட போட்டிகளில் புத்தளம் வெட்டாளை அசன் குத்தூஸ் முஸ்லிம் வித்தியாலய 16 வயதுக்கு கீழான அணி வடமேல் மாகாணத்தில் முதலிடத்தையும், 18 வயதுக்கு கீழான அணி இரண்டாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளது. இவ்விரு அணிகளும் அகில இலங்கை ரீதியான போட்டிகளுக்கும் தெரிவு செய்யப்படுள்ளது.

இந்த இரு அணிகளின் வீரர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் ஏ.ஜே.எம்.இல்ஹாம் தலைமையில் பாடசாலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

# காட்டு யானைகள் படையெடுப்பு

அம்பாறை மாவட்டத்தின் எல்லை கிராமங்கள் காட்டுப் பகுதியில் வசித்து வந்த காட்டு யானைகள், கூட்டம் கூட்டமாக காரைதீவு பிரதேசம் வரை படையெடுக்க ஆரம்பித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனால் இரவு நேரங்களில் அக்கரைப்பற்று - கல்முனை, கல்முனை - அம்பாறை வீதிகளில் தனியாக மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போர் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கூட்டமாக வரும் காட்டு யானைகள் மனித உயிர்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதுடன், குடியிருப்புகளுக்கும் பயனுள்ள தென்னை மரங்களுக்கும் பலத்த சேதத்தை ஏற்படுத்தி வருகின்றதாகத்



தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்கும் வகையில் காட்டு யானைகள் படையெடுப்பைக் கட்டுப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட வனவிலங்கு அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மனைவிக்கு தீ மூட்டிய கணவர்

■ ஜெங்கில்லைநாதன்

குடும்பத் தகராறில் கணவன், மனைவிக்கு தீ வைத்து எரித்ததில் படுகாயமடைந்த மனைவி, யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் அச்சுவேலியில் பிரதேசத்தில் , ஞாயிற்றுக்கிழமை (25) இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில், இரு பிள்ளைகளின் தாயான பாலகிருஷ்ணன் நிருத்திகா (வயது 28) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

குறித்த பெண்ணுக்கும் அவரது கணவனுக்கும் இடையே முரண்பாடு இருந்து வந்துள்ள நிலையில், மது போதையில் வந்த கணவன், அவருடன் முரண் பட்டுள்ளார். இந்நிலையில், பெண்ணின் அபயக்குரல் சத்தம் கேட்டதும் அவர்களின் வீட்டின் அருகே வசித்து வந்த பெண்ணின் சகோதரன் உதவிக்கு ஓடிப் பார்த்த போது, அவரது சகோதரி தீயில் எரிந்துகொண்டிருந்துள்ளார்.

உடனடியாக அயலவர்களின் உதவியுடன் பெண் மீட்கப்பட்டு அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.


இதனிடையே, அங்கிருந்தவர்களால் தாக்கப்பட்ட பெண்ணின் கணவரும் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட பெண்ணின் சகோதரன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டு இலங்கைக்கு சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட ரூ.2220,000 பெறுமதியான சிகரெட்டுகளுடன், அநுராதபுரம்-மடத்துகம பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவர், விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் செவ்வாய்க்கிழமை (27) கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயில் பல வருடங்களாக வாடகை வண்டி சாரதியாகக் கடமையாற்றிய சந்தேகநபர், செவ்வாய்க்கிழமை(27) அதிகாலை சுமார் 3.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.



‘பிளாட்டினம்’ ரக சிகரெட்டுகள் 14,800 அடங்கிய 74 சிகரெட் அட்டைப் பெட்டிகள் அவரது பயணப் பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கைதானவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை(30) சந்தேகநபருடன் மீட்கப்பட்ட சிகரெட் தொகையை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைபடுத்தப் படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# “அனுரவால் பேச மட்டுமே முடியும்”

■ ரஸீன் ரஸ்மின்

சஜித் பிரேமதாச ஜனாதிபதியானால் நாட்டின் பொருளாதாரத்தில் எழுச்சி ஏற்படும் என தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, சஜித்தின் ஆட்சியில் பெண்களுக்கு என விசேட திட்டம் ஒன்றும் வகுக்கப்படும் என்று புத்தளத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை வெற்றி பெறச் செய்யும் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் திங்கட்கிழமை (26) புத்தளம் மாவட்டத்தின் பல பிரதேசங்களில் நடைபெற்றது.

அந்த வகையில் முந்தல் - வட்டவான் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது புத்தளம் மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் என பெரும் எண்ணிக்கையிலான மக்களும் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர மேலும் பேசுகையில் கூறியதாவது,

வரும் ஜனாதிபதித் தேர்தலில்



புத்தளம் தொகுதியில் ஐக்கிய மக்கள் சக்தி நிச்சயமாக வெற்றி பெரும் என்பதில் சந்தேகமில்லை.

என்றாலும், புத்தளத்தில் ஒரு இலட்சத்திற்கு மேல் வாக்குகளை எமது கட்சி பெற வேண்டும். புத்தளம் தான் முழு மாவட்டத்தையும் வெற்றி பெறச் செய்யும் தொகுதியாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 39 வேட்பாளர்களையும் ஒரு முறை எடுத்துப் பாருங்கள். அனுரகுமார திசாநாயக்க நன்றாகப் பேசுவார். அவரால் பேச மட்டும் தான் முடியும்.

ஆனால், நாட்டு மக்களுக்கு இதுவரை அவரும், அவர் சார்ந்த கட்சியும் காத்திரமான நல்ல பணிகளை முன்னெடுக்க வில்லை. இனியும் அவர்கள் எதையும் செய்யப் போவதுமில்லை. அவர் வகிக்கும் கட்சியின் பெயரைக் கேட்டால் மக்களுக்கு ஒருவிதமான அச்சம் இன்றும் இருக்கிறது.

அத்துடன், நாமல் ராஜபக்ஷவும் ஒரு வேட்பாளராகப் போட்டியிடுகிறார். இந்த நாட்டை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்தவர்கள் நாமலுடைய சிற்றப்பாக்கள்.

நாட்டை கொள்ளையடித்து வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றுள்ளார்கள் என்பது தெளிவான உண்மையாகும். ஆனால், அவரைப் பற்றி பெரிதும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

அன்று தொலைபேசி சின்னத்தில் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்த போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நாங்கள் பிளவுகளை ஏற்படுத்தினோம் என்று சொன்னார்.

ஐக்கிய தேசியக் கட்சி இன்று முழுமையாக இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. வாக்குச் சீட்டில் யானையின் சின்னமும் இல்லை. கட்சியின் பெயரும் இல்லை.

இந்த நாட்டின் வரலாற்றில் இடம் பிடித்த மிகவும் பழமை வாய்ந்த கட்சிதான் ஐக்கிய தேசியக் கட்சியாகும். இந்தக் கட்சி பல அரசியல் தலைவர்களை உருவாக்கியது. நாட்டு மக்களுக்குப் பல வருடங்கள் சேவைகளைச் செய்தது என்றார்.

# முதலிடம்



■ மெய்யன்

மமா/க/வத்/ சிவனேஸ்வரா தமிழ் வித்தியாலய மாணவி ஆர்.நிவிஷாலனி, ஆங்கில மொழிப் போட்டியில் வலய மட்டத்தில் முதலிடம் பெற்று பாடசாலை வரலாற்றில் கீர்த்தியை பெற்றுக் கொடுத்துள்ளார். ஆரம்ப பிரிவு பாடசாலைகளுக்கான Copy Writing நிகழ்ச்சியிலே இவர் பன்விலை கோட்ட மட்டத்தில் வெற்றிபெற்று வத்தேகம வலய மட்டப் போட்டியில் முதலிடம் பெற்று மத்திய மாகாண போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# பாடநூல்களை அச்சிட அங்கீகாரம்

2025ற்கு தேவையான பாடசாலை பாடநூல்களை அச்சிடுவதற்கு 317 வகையான பாடநூல்களில் 71 வகையான பாடநூல்களை அரச அச்சக கூட்டுத்தாபனத்திடம் அச்சிடுவதற்கு 2024.04.01 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டில் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாகப் பாடநூல்களை விநியோகிப்பதற்குத் தேவையான எஞ்சியுள்ள 246 பாடநூல் வகைகளை அச்சிடுவதற்குத் தேசிய போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, குறைந்த விலை மனுவை சமர்ப்பித்துள்ள 24 அச்சகங்களுக்கு, 1, 6 மற்றும் 10ஆம் தரங்கள் தவிர்ந்த ஏனைய தரங்களுக்கான பாடநூல்களை அச்சிடுவதற்கு கல்வி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# “வளமான நாடு – அழகான வாழ்க்கை”யின் சாத்தியப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு செப்டெம்பர் 21ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்படவிருக்கின்ற நிலையில், தேர்தல் பிரசாரங்கள், சந்திப்புகள், கட்சித்தாவல்கள் சூடுபிடித்துள்ளன. தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் நிலையில், பிரதான வேட்பாளர்கள் தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுவருகின்றனர்.

முன்னதாக ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம், திங்கட்கிழமை (26) வெளியிடப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் அந்த கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தலைமையில், புதன்கிழமை (28) வெளியிடப்படும்.

சுயேச்சை வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனம், வியாழக்கிழமை(29) வெளியிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னணி வேட்பாளர்களில் அடுத்தபடியாக இருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் விஞ்ஞாபனம் தொடர்பில் எவ்விதமான அறிவித்தலும் வெளியாகவில்லை.

கடந்தகால தேர்தல் விஞ்ஞாபனங்களைப் பார்த்தோமெனில், சம்பள உயர்வு, சலுகைகள், நிவாரணங்கள் உள்ளிட்டவை தொடர்பில் ஏட்டிக்குப்போட்டியான அறிவிப்புகள் வெளியாகும். அதில், இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கும் அதனை வைத்துக்கொண்டே, நாட்டை பிரிக்கப்போகின்றனர் என ஒரு தரப்புக்கு எதிரான தரப்பினர் பிரசாரங்களை மேற்கொள்வர்.

இவ்வாறான நிலையில், தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், கையை கடித்துக்கொள்ளாத வகையில், புதிய அரசியலமைப்பின் ஊடாக பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றும் விட்ட இடத்திலிருந்து தொடரப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இது, இனவாத பிரசாரங்களை முன்னெடுக்கக் காத்திருந்தவர்களின் வாய்களுக்கு இடப்பட்ட பூட்டாகும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல், புதிய பாராளுமன்ற தேர்தல் முறைமை உள்ளிட்டவை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டமை வரவேற்கத்தக்க விடயமாகும். நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்போம் என கோஷமிட்டுக்கொண்டு சிம்மாசனத்தில் ஏறுவோர். பதவிக்காலம் நிறைவடையும் வரையிலும் அதனைத் தொட்டுப்பார்ப்பதே இல்லை என்பதை நினைவூட்டுகின்றோம்.

பல விடயங்கள் தொடர்பில், ஒவ்வொரு தலைப்பிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ள அந்த விஞ்ஞாபனத்தில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம், இலவச வாகன அனுமதிப் பத்திரம், சபை அமர்வு, கொடுப்பனவு நிறுத்தப்படும். ஜனாதிபதிக்குரிய உத்தியோகபூர்வ இல்லங்கள், முன்னாள் ஜனாதிபதிகளுக்கும், அவர்களின் வாழ்க்கைத் துணைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள ஓய்வூதியம் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், தங்களுடைய ஆட்சியின் கீழ் அமைக்கப்படும் அமைச்சரவையில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், பிரதியமைச்சர்களின் எண்ணிக்கை தலா 25 ஆக மட்டுப்படுத்தப்படும். இராஜாங்க அமைச்சு பதவிகள் நீக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊழல், மோசடிகள் தொடர்பில் பல தகவல்களை புள்ளிவிபரங்களுடன் அள்ளி வழங்கும் தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை அவ்வாறே அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே பெரும்பாலானவர்களின் எதிர்பார்ப்பாகும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

தங்களது மனத்தை வதைக்க, அவர்களுக்கே உரிமையில்லை. உயிருடன் வாழும் வரை, மனமும் மனிதனுடன் ஒட்டியபடியே இருக்கும். எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

நெஞ்சத்தின் பாஷை மனம். மூளை, செயற்படுத்தும் கருவி என்றாலும், துன்பம் சூழும்போது, நெஞ்சத்தை மனம் நோகடிக்கின்றது. ஓடும் நினைவுகளை நிறுத்த முடியாமல் திணறுகின்றது.

மனம், உலகிலுள்ள எந்த வேக சக்திக்கும் மேலான வேகம் கொண்டது. இலட்சத்தில் ஒரு வினாடிப் பொழுதுக்குள், மனம் புதிய புதிய எண்ணங்களை உருவாக்குகின்றது. எனவே, உயிருடன் இணைந்த மனத்தை, எக்காரணம் கொண்டும் துன்புறுத்தலாகாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தலைவர்களின் அனுபவமா? நேர்மையா? முக்கியம்



எம்.எஸ்.எம். ஐயூப்

இதற்கு முன்னர் இலங்கையில் நடைபெற்ற எட்டு ஜனாதிபதித் தேர்தல்களுக்கும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கும் இடையில் சில முக்கிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

மக்கள் விடுதலை முன்னணியை மையமாக கொண்டு உருவாக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் வளர்ச்சியே அந்த வேறுபாடுகளுக்கு காரணமாகும்.

முதலாவதாக, இது வரை நடைபெற்ற சகல ஜனாதிபதித் தேர்தல்களும் இருமுனை போட்டியாகவே நடைபெற்றது. ஆனால், இம்முறை தேர்தல் குறைந்த பட்சம் மும்முனைப் போட்டியாக போகிறது.

சிலவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ எதிர்வரும் சில வாரங்களில் வளர்ச்சி அடைந்தால் அது நான்கு முனைப் போட்டியாகவும் கூடும்.

2021 பொருளாதார நெருக்கடி தோன்றாமல் இருந்தால் இம்முறை ஜனாதிபதி தேர்தலும் இரு முனைப் போட்டியாகவே நடைபெற்றிருக்கும். அப்பொருளாதார நெருக்கடியின் காரணமாகவும் அதனால் வெடித்த மக்கள் எழுச்சியின் காரணமாகவும் புதியதோர் அரசியல் பாதையைத் தேடிய பெருமளவான வாக்காளர்கள் மக்கள் விடுதலை முன்னணியை மையமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தியின் பின்னால் அணி திரண்டுள்ளனர்.

அத்தோடு 2020 பிளவுபட்ட ஐக்கிய தேசிய கட்சியின் இரண்டு பிரிவுகளும் இம்முறை தனித்தனி கட்சிகளாகப் போட்டியிடுகின்றன.

இரண்டாவதாக, சாதாரண குடும்பத்தில் பிறந்து அந்த சாதாரண தரத்திலேயே வாழ்ந்த வண்ணம் ஒருவர் முன்னணி வேட்பாளர்களில் ஒருவராகப் போட்டியிடும் முதலாவது முறை இதுவாகும். தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க இன்னமும் ஒரு சாதாரண குடும்பத்தவறாகவே இருக்கிறார்.

இதற்கு முன்னர் முன்னணி வேட்பாளர்களாக இருந்தவர்கள் எல்லோரும் உயர் வர்க்கத்தவர்களாகவே இருந்தனர்.

1988 நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ரணசிங்க பிரேமதாச சாதாரண குடும்பமொன்றில் பிறந்தவர். ஆயினும், அவர் ஜனாதிபதியாகும் முன் 1955 முதல் கொழும்பு மாநகர சபை உறுப்பினராகவும் பிரதி மேயராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் பிரதி அமைச்சராகவும் அமைச்சராகவும் பின்னர் பிரதமராகவும் 33 வருடங்கள் பல்வேறு பதவிகளில் கடமையாற்றி ஜனாதிபதியாகப் போட்டியிடும் போது செல்வந்தராக மாறியிருந்தார்.

இம்முன்னணி வேட்பாளர்களாகப் போட்டியிடும் நால்வரில் இருவர் அதாவது சஜித் பிரேமதாசவும், நாமல் ராஜபக்ஷவும் முன்னாள் ஜனாதிபதிகளின் மகன்களாவர். (ரணசிங்க பிரேமதாசவினதும் மஹிந்த ராஜபக்ஷவினதும் மகன்களாவர்) ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருந்து கொண்டே போட்டியிடுகிறார்.

அனுரவின் குடும்பத்தில் எவரும் அரசியல்வாதிகளாக இருந்ததில்லை.

அனுர, 2000 முதல் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். 2004 ஏப்ரல் மாதம் முதல் 14 மாதங்களாக அமைச்சராக இருந்துள்ளார்.

எனவே, ஒரு வகையில் இம்முறை ஜனாதிபதி தேர்தலானது அனுரவுக்கும் ஏனைய மூன்று முன்னணி வேட்பாளர்களுக்கும் இடையிலான வர்க்கப் போராட்டமாகவும் கருதலாம்.

இப்போதைக்குத் தெளிவாக இல்லாவிட்டாலும் எதிர்வரும் நாட்களில் இது தெளிவாகத் தெரியவும் கூடும்.

இந்த நிலையில், அனுபவமற்றவரைப் பதவியில் அமர்த்த கூடாது என்றும் தற்போதைய பொருளாதார நிலையில், பரீட்சார்த்தமாக எவரையும் பதவியில் அமர்த்த கூடாது என்றும் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கும் அரசியல்வாதிகள் வாதிடுகின்றனர். இந்த வாதம் ஒரு வகையில் சஜித் மற்றும் நாமல் ஆகியோருக்கும் பொருத்தமானதாக இருந்தாலும் குறிப்பாக அனுரவை குறிவைத்து முன்வைக்கப்படுகிறது.

அனுரகுமார இத்தேர்தலில் வெற்றி பெறுவாரா? இல்லையா? என்பதோ வெற்றி பெற்றாலும் அவரால் இந்நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா? முடியாதா? என்பது தற்போதைய நிலையில், அறுதியிட்டு கூற முடியாத ஒரு விடயமாகும். அவ்வாறு கூறுவது எமது நோக்கமும் அல்ல.

எனினும், அவர்களைக் குறிவைத்து முன்வைக்கும் இந்த வாதமானது பொதுவாக இந்நாட்டு அரசியலை மிக மோசமான பாதையில் இட்டுச் செல்லக் கூடிய மிகவும் மோசமான வாதமாகும்.

சித்தாந்த ரீதியில் இந்த வாதம் மிகவும் பிற்போக்கானதாகும். இதனை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையின் முன்னாள் அதிபரான சர்வதேச ரீதியில் மதிக்கப்படும் பேராசிரியர் காமினி கிரவெல்ல மிகத்தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

உலகில் அத்தனை வெற்றிகரமான புதியனவும் பரீட்சார்த்ததமாகவே முதலில் முன்வைக்கப்பட்டன என்று அவர் கூறியுள்ளார்.

தமது இந்த பிற்போக்கான வாதத்தை நியாயப்படுத்த அதை முன்வைப்போர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் அரசியல் வருகையையும் அவரது அரசியல் பொருளாதார தோல்வியையும் சான்றாக முன்வைக்கின்றனர்.

இன்று அனுர பின்னால் அலை அலையாக மக்கள் திரண்டு இருப்பதைப்போல், 2019 கோட்டா பின்னாலும் பெருமளவில் மக்கள் திரண்டிருந்தார்கள் என்றும் இன்று வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் அனுரவின் வெற்றிக்காகப் பெருமளவில் பங்களிப்பதைப் போல் அன்று கோட்டாவுக்காகவும் உழைத்தனர்.

அனுரவின் வெற்றியைப் பற்றியோ அவரது ஆட்சியைப் பற்றியோ எம்மால் எவ்வித உத்தரவாதத்தையும் அளிக்க முடியாத போதிலும், அனுரவையும் கோட்டாவையும் இந்த விடயத்தில் ஒப்பிட முடியாது. ராஜபக்ஷக்களில் ஒருவரான கோட்டாவிடம் பதவி ஆசையும் அதன் மூலம் பணம் சம்பாதிக்கும் நோக்கமும் எதிரிகளைப் பழிவாங்கும் தேவையும் மட்டுமே இருந்தது.

இராணுவ அதிகாரியாக அவரிடம் ஓரளவு நிர்வாகத் திறமை இருந்த போதிலும், அரசாங்கம் என்ற சிக்கலார்ந்த பொறிமுறையை நிர்வகிக்க அது போதுமானதாக இருக்கவில்லை என்பது அவர் பதவி துறந்ததன் பின்னர் எழுதிய ‘Conspiracy’ என்ற புத்தகத்தின் மூலம் தெரிகிறது.

அனுர என்பவர் அரசியல் ரீதியாகத் தனி நபர் அல்ல. மக்கள் விடுதலை முன்னணியிலும் தேசிய மக்கள் சக்தியிலும் உட்கட்சி அமைப்பின் படி, கட்சித் தலைவர் எதேச்சையாக நடந்துகொள்ள முடியாது.

அவை கூட்டு முடிவு எடுக்கும் கட்சிகளாகும். அக்கட்சிகளின் பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறைக்காகவும் நிபுணர்கள் குழுக்கள் இருக்கின்றன. அவற்றின் முடிவுகளே கட்சித் தலைவரால் வெளியிடப்படுகின்றன.

இதில் ஒரு நடைமுறை பிரச்சினையும் இருக்கிறது. குறிப்பிட்டதோர் விடயத்தில் கைவைக்காது அனுபவமற்றவர் எவ்வாறு அனுபவசாலியாகலாம்? தற்போது அனுபவம் வாய்ந்தவர்கள் என்று கூறி கொள்பவர்கள் எவ்வாறு தற்போதைய நிலைக்கு வந்தார்கள்?

சமையலறையிலிருந்து 1960ஆம் ஆண்டு நேரடியாகப் பாராளுமன்றத்துக்கு வந்த சிறிமா பண்டாரநாயக்க நேரடியாகப் பிரதமராக அரசாங்கத்தைப் பொறுப்பேற்றார்.

1977ஆம் ஆண்டு முதன்முதலாகப் பாராளுமன்றத்திற்குத் தெரிவான ரணில் விக்ரமசிங்கவுக்கு நாட்டின் மிகவும் முக்கியமான கல்வி அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டது. சந்திரிகா குமாரதுங்க 1994ஆம் ஆண்டே முதன் முதலில் தேர்தலொன்றில் போட்டியிட்டார். அதன் மூலம் மேல் மாகாண சபைக்கு தெரிவான உடனேயே அவர் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அனுபவசாலிகள் என்று கூறப்படுபவர்கள் இந்த நாட்டுக்கு என்ன செய்தார்கள். என்பது அடுத்து முக்கிய கேள்வியாகும். மிகச் சிறிய நிர்வாக சீர்திருத்தங்கள் மூலம் தீர்க்கக் கூடியதாக இருந்த இனப்பிரச்சினையை அரசியல் இலாபம் கருதி பூதாகாரமாக வளர விட்டு பல்லாயிரக் கணக்கானவர்களின் உயிருக்கு உலை வைததவர்கள் இந்த அனுபவசாலிகளாவர்.

இன்னமும் அவர்களால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதிருக்கிறது. இன்னமும் அவர்கள் சர்வகட்சி மாநாடு அரசியலமைப்புத் திருத்தம் என்று பலவற்றைக் கூறி தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஏமாறும் தமிழ் முஸ்லிம் தலைவர்களும் இருக்கிறார்கள்.

சுதந்திரமடைந்த ஆரம்பக் காலத்தில் இலங்கை பிரித்தானியாவுக்கும் கடன் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

பின்னர் கடன்காரனாக மாறிய இந்நாடு, படிப்படியாக அக்கடன் தொகை அதிகரித்ததன் விளைவாக 2022ஆம் ஆண்டு வங்குரோத்து நிலையை அடைந்தது.

இன்னமும் அனுபவசாலிகளாகக் கருதப்படும் இந்த நாட்டுத் தலைவர்கள், வெளிநாட்டுக் கடனை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது என்று தெரியாமல் தடுமாறுகிறார்கள்.

இலங்கை ஊழல் மலிந்த நாடாக கருதப்படுகிறது. கடந்த வருடம் Transparency International நிறுவனத்தினால் நடத்தப்பட்ட ஆய்வின் படி, இலங்கை ஊழல் ஒழிப்பு விடயத்தில் உலகில் 180 நாடுகளில் 115ஆவது இடத்தில் இருந்தது. இதுவும் அனுபவசாலிகள் நாட்டுக்குப் பெற்றுத்தந்த பெருமையாகும்.

எனவே தான் 2022இல் வெடித்த மக்கள் எழுச்சியின் போது, இலட்சக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி அனுபவம் உள்ளவர்கள் என்ற பழையவர்களை முற்றாக நிராகரித்தனர்.

அவர்கள் புதியதோர் அரசியல் பாதையையே கோரி நின்றனர். அனுபவம் என்பதைக் குறைவாக மதிப்பிடுவது எமது நோக்கமல்ல. ஆயினும், நேர்மையானவர்களின் அனுபவம் மட்டுமே நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை தரும் என்பதே எமது வாதமாகும். திருடர்களினதும் இன வாதிகளினதும் அனுபவம் அழிவுக்கே இட்டுச்செல்லும்.

## கடிதங்கள்



### யாரும் கண்டு கொள்வதில்லை

பொத்துவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட றொட்டை மீள் குடியேற்ற கிராமத்திற்கு செல்லும் பிரதான வீதியினை செப்பனிட்டு தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 10 வருடத்திற்கும் மேலாக குறித்த வீதியானது உடைந்து, சேதமடைந்து, குண்டும் குழியுமாக காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணிகள், வயோதிபர்கள், விவசாயிகள் மற்றும் பொது மக்களின் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டு பெரும் துன்பங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

றொட்டை மீள் குடியேற்ற கிராமத்தில் 347 குடும்பங்கள் வாழ்ந்து வருவதோடு, றொட்டை, ஜெய்க்கா ஆகிய கிராமங்களுக்கும் மற்றும் தாரம்பளை விவசாயக் காணிகளுக்குச் செல்லும் விவசாயிகளும் மக்கள் தமது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக குறித்த வீதியினை பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு கவனிப்பாரற்று ஒதுக்கப்பட்டு வாழும் இந்த மக்களின் நன்மை போக்குவரத்திற்காக குறித்த வீதியினை புனரமைத்துத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

– எம்.எஸ்.எம்.ஹனீபா

# அரச-தனியார் கூட்டாண்மை முதலீடு

GIZ மற்றும் கொகா-கோலா அமைப்பு, நெஸ்லே, யுனிலீவர் மற்றும் உள்நாட்டு அதிகார சபைகள் இணைந்து, அரச-தனியார் கூட்டாண்மை மூலமாக மதிப்பைத் தோற்றுவிப்பதற்கான முதலீட்டை மேற்கொள்கின்றன

திண்மக் கழிவை நிர்வகிப்பதில் எழுந்துள்ள சவால்களுக்கு மத்தியில், Deutsche Gesellschaft fur Internationale Zusammenarbeit (GIZ) GmbH மற்றும் The Coca-Cola Foundation உடன் இணைந்த Coca-Cola Sri Lanka Beverages Ltd, நெஸ்லே மற்றும் யுனிலீவர் ஆகியன இச்செயற்பாட்டை முன்னெடுக்கின்றன.

இலங்கையிலுள்ள விரைவாக விற்பனையாகும் நுகர்வோர் தயாரிப்புக்களின் மூன்று பாரிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து, பிளாஸ்டிக் மாசுபாட்டைச் சமாளித்து, பிளாஸ்டிக் கழிவுகள் மூலமாக வெளிக்கொண்டு வரக்கூடிய வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளும் இலக்குடன் நிலைபேணத்தக்க பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவச் செயற்றிட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்வந்துள்ளன.

'Waste to Value' என பெயரிடப்பட்ட அரச-தனியார் கூட்டாண்மையானது பிளாஸ்திக் கழிவு சேகரிப்பு, தரம் பிரிப்பு, மீள் சுழற்சி மற்றும் மீள்பயன்பாடு ஆகியன தொடர்பான உட்கட்டமைப்பினை




வலுப்படுத்தி,பொறுப்புடன் கழிவை அகற்றுவதால் வாழ்வாதாரங்கள் மற்றும் சூழலுக்கு கிடைக்கின்ற மதிப்பு தொடர்பான விழிப்புணர்வைத் தோற்றுவித்து சுழற்சிப் பொருளாதாரத்தை நோக்கிய நடத்தை மாற்றத்தை முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஜேர்மன் கூட்டாட்சி அமைச்சின் (German Federal Ministry for Economic Cooperation and Development - BMZ) நிதியுதவியுடன் அதன் கூட்டமைப்பு பங்காளர்களுடன் இணைந்து முன்னெடுக்கும் அதன் develoPPP நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக, பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கூட்டாண்மையுடன் இரு கட்டங்களாக இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

2022ஆம் ஆண்டில் இதற்கான ஆரம்பகட்ட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், சேகரிக்கப்படுகின்ற தொன் அளவு, கிடைக்கின்ற இட வசதி, தரம் பிரிப்பு மற்றும் மீள் சுழற்சிக்கான வளர்ச்சி வாய்ப்புக்கள் அடங்கலாக, மேல் மாகாணத்தில் உள்ளூர் அதிகாரசபைகளின் பிளாஸ்டிக் கழிவின் பின்னணியை விளங்கிக் கொள்வதற்கான அடிப்படை ஆய்வை இக்கூட்டமைப்பு முன்னெடுத்திருந்தது. முழுமையான ஆய்வைத் தொடர்ந்து, இச்செயற்றிட்டத்திற்காக ஒன்பது உள்ளூராட்சி சபைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில், முதற்கட்டமாக, கம்பஹா பிரதேச சபை, ஹோமகம பிரதேச சபை மற்றும் கெஸ்பாவ நகர சபை ஆகிய போதிய இட வசதிகளைக் கொண்ட உள்ளூராட்சி சபைகளில் பிளாஸ்டிக் மற்றும் ஏனைய மீள் சுழற்சி செய்யப்படக்கூடிய கழிவுகளை மீட்பதற்கான மூலப்பொருள் மீட்பு தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன. இரண்டாம் கட்டத்தில் போதிய இட வசதியைக் கொண்டிராத ஐந்து உள்ளூராட்சி சபைகள் இச்செயற்றிட்டத்தின் கீழ் மூலப்பொருள் மீட்பு தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதற்காக சேர்க்கப்படவுள்ளதுடன், தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் வீட்டு மட்டத்தில் கழிவை தரம் பிரிப்பதற்கு பிரதேசவாசிகள் ஊக்குவிக்கப்படவுள்ளனர்.

## அவிசாவளை வைத்தியசாலை புனரமைப்புக்கு

# Midas Safety Lanka வழிகோலியுள்ளது

Midas Safety நிறுவனங்கள் குழுமத்தின் அங்கமான Midas Safety Lanka, கடந்த 44 ஆண்டுகளாக பல்வகைப்பட்ட கை மற்றும் தனிப்பட்ட பாதுகாப்புக் கவச தயாரிப்புக்களில் நிபுணத்துவத்திற்கு பெயர்பெற்று விளங்குவதுடன், தொடர்ச்சியான தரம், தொழில்துறை அறிவு மற்றும் புத்தாக்கமான தீர்வுகள் ஆகியவற்றில் வலுவான கவனத்துடன், 50க்கும் மேற்பட்ட நாடுகளில் முன்னணி வாடிக்கையாளர்களுக்கு தனது சேவைகளை வழங்கி வருகின்றது. உலகளவில் 10,000 க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டுள்ள Midas Safety, கட்டுநாயக்க, பியகம மற்றும் சீதாவக்க ஏற்றுமதி உற்பத்தி வலயங்களில் மூன்று தொழிற்சாலைகளுடன், இலங்கை பிராந்தியத்தில் சுமார் 3,000 ஊழியர்களையும் கொண்டுள்ளது.

"The Ismat and Mustafa Kassam Foundation" என்ற நிதியத்தினூடாக, நாம் தொழிற்பாடுகளை முன்னெடுக்கின்ற சமூகங்களை மேம்படுத்தும் இலக்குடன், பல்வகைப்பட்ட சமூக மற்றும் மனிதாபிமான முயற்சிகளை Midas Safety முன்னெடுத்து வருகின்றது. இவற்றுள் கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு ஆகியன முன்னிலைப்படு த்தப்பட்டுள்ளன. பொருளாதார மற்றும் தொற்று நோய் நெருக்கடியின் போது, ரூபாய் 20 மில்லியன் பெறுமதியான உபகரணத்தை நன்கொடை அளித்த Midas Safety Lanka, இலங்கை இராணுவத்தின் துணையுடன் அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையில் கோவிட்-19 சிகிச்சை விடுதியை ஸ்தாபித்திருந்தது. மருத்துவ உபகரணம், அம்பியுலன்ஸ் வண்டிகள், மருந்துப் பொருட்கள் ஆகியவற்றுக்கும் நிதியளித்த நிறுவனம், இரத்ததான பிரச்சாரங்களையும் ஏற்பாடு செய்திருந்தது.

Midas Safety, Sri Lanka நிறுவனத்தின் இலங்கைக்கான தலைமை அதிகாரி புஷ்பசிறி பண்டார உரையாற்றுகையில், "சமூகப் பொறுப்புணர்வு தொடர்பில் Midas Safety நீண்டகாலமாக நன்மதிப்பைப் பெற்று வருவதுடன், சுகாதாரப் பராமரிப்புத் துறையுடன் எமது வலுவான கூட்டாண்மையானது இலங்கையில் வைத்திசாலை வசதிகளை மேம்படுத்துவதில் தொடர்ச்சியாக முதலீடு செய்வதற்கு எம்மை வழிநடத்தியுள்ளது. மிக அண்மையில், அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையில் ஆறு கட்டடங்களை விஸ்தரித்து, புனரமைப்புச் செய்வதற்கு சுமார் ரூபாய் 110 மில்லியன் தொகை கொண்ட கட்டுமானப் பணிகளை நாம் முன்னெடுத்துள்ளோம். வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவும் இதில் அடங்குவதுடன், வைத்தியசாலையின் மருத்துவ பணியாளர்கள், அபிவிருத்திச் சபை மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஆகிய தரப்பினருடனான கூட்டு முயற்சிகளின் துணையுடன் இந்த பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.



Midas Safety இன் குழும பிரதம தகவல் அதிகாரியும், இச்செயற்திட்டத்திற்கான தலைமை அதிகாரியுமான அர்ஜுன ஜெயசிங்க உரையாற்றுகையில், "தனது தயாரிப்புக்கள் மற்றும் அவிசாவளை மாவட்ட பொது வைத்தியாலையின் அபிவிருத்தி போன்ற வர்த்தக சமூகப் பொறுப்புணர்வு முயற்சிகளினூடாக இன்றும், எதிர்காலத்திலும் உலகினை பாதுகாப்பான மற்றும் சிறந்த இடமாக மாற்றியமைப்பதில் Midas Safety அர்ப்பணிப்புடன் உள்ளது. இந்த வைத்தியசாலை, மாவட்ட பொது வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளதுடன், கொழும்பு, இரத்தினபுரி, கேகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இருந்து 800,000 க்கும் மேற்பட்ட மக்களுக்கு சேவைகளை வழங்கி வருகின்றது. சில விடுதிகளில் கிட்டத்தட்ட 140% என்ற நோயாளர் கட்டில் பாவனை வீதம் மற்றும் காலத்திற்கு ஒவ்வாத வசதிகளுடன், இவ்வைத்தியசாலை சமூகத்திற்கு தொடர்ந்து முக்கியமான சேவைகளை வழங்கி வருகின்றது. பாரிய புனரமைப்புப் பணி நிறைவுற்றுள்ளதுடன், எஞ்சிய பணிகளும் முடிந்த வரை விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு, இவ்வைத்தியசாலை தொடர்ந்தும் சமூகத்திற்கு திறம்பட சேவைகளை வழங்குவது உறுதி செய்யப்படும்" என்று குறிப்பிட்டார்.

# SLT-MOBITEL அரையாண்டில் நடுத்தரவருமான வளர்ச்சி

SLT - Mobitel நிறுவனமானது 2024இல் முடிவடைந்த அரையாண்டில் நடுத்தர வருமான வளர்ச்சியை பதிவு செய்துள்ள அதேவேளை, செலவு கட்டுப்படுத்தல் முயற்சிகள் மூலம் சேமிப்பை வெளிப்படுத்தியுள்ளது.

சவாலான சந்தை சூழலின் மத்தியில் 2024இன் முதற் பாதியில் SLT-MOBITEL இன் செயல் திறன் அதன் நெகிழ்வுத்தன்மை மற்றும் இணக்கத் தன்மையைச் சுட்டிக்காட்டுகிறது. வெற்றிகரமான செலவு-சேமிப்பு முயற்சிகளுடன் கூடிய நடுத்தர வருமான வளர்ச்சி குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுக்கு வழிவகுத்துள்ளன.

2024இன் முடிவடைந்த அரையாண்டில் குழுமத்தின் மொத்த வருமானம் ரூ.53.5 பில்லியனை எட்டியுள்ளமை கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 1.6% அதிகரிப்பைக் காட்டுகிறது. குழுமட்டத்தில் மொத்த இலாபம் 4.0%ஆல் அதிகரித்து ரூ.20.9 பில்லியனாக உள்ளது. மொத்த இலாப வீதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 38.1%ஆக இருந்து 39.0%ஆக உயர்வடைந்துள்ளது. மேலும், புதிய இணைப்புகளுக்கான குறைவான தேவை மற்றும் தற்போதைய வாடிக்கையாளர்களின் சேவை வெளியேற்றம் போன்ற சவால் மிக்க சந்தை நிலைவரங்கள் மத்தியில் இந்த நடுத்தர வளர்ச்சி அடையப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

குழுமத்தின் முடிவடைந்த அரையாண்டிற்கான EBITDA (வட்டி, வரிகள், தேய்மானம், கடன் தவணை செலுத்துதல் ஆகிய செலவீனங்கள் கழிக்கப்படும் முன் உள்ள வருமானம் 17.1% ஆக அதிகரித்து ரூ. 18.0 பில்லியனை எட்டியதுடன், தொழிற்பாட்டு இலாபம் 54.5%ஆல் அதிகரித்து ரூ.3.6 பில்லியனாக இருந்தது. மேலும், 2023இன் முடிவடைந்த அரையாண்டுடன் ஒப்பிடுகையில் 2024இன் முடிவடைந்த அரையாண்டில் EBITDA, 29.2%இல் இருந்து 33.6% அதிகரிப்பானது நிறுவனத்தின் சேவைத்தரத்தைப் பராமரிக்கும் அதேவேளை, செயற்பாட்டுத்திறனை மேம்படுத்தும் குழுவின் திறனைப் பிரதிபலிக்கிறது.

SLT-MOBITEL குறைக்கப்பட்ட நிதி செலவுகளிலிருந்தும் பயனடைந்தது. குறிப்பாகக் குறைந்த வட்டி விகிதங்கள் காரணமாகக் குழு மட்டத்தில் வட்டி செலவுகள் 19.5%ஆல் குறைந்துள்ளது. இது குழுமத்தின் அடித்தள முன்னேற்றத்திற்குப் பங்களித்தது. இதன் விளைவாக 2024இன் முடிவடைந்த அரையாண்டில் குழுமத்தின் தேறிய நட்டமானது 2023இன் முதல் அரையாண்டுடன் ஒப்பிடுகையில், ரூ. 1,159 மில்லியனிலிருந்து ரூ.323 மில்லியனாக குறைவடைந்துள்ளது.


ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின், நிறுவன மட்ட வருமான வளர்ச்சியானது 2024ஆம் முதல் அரையாண்டில், 0.9% என்ற சிறிய அதிகரிப்புடன், 35.0 பில்லியனாக இருந்தது. தொழிற்பாட்டு இலாபம் 2.9% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. வருடாந்த பராமரிப்பு செலவு, வாடகை செலவு, பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவுகள் போன்ற தொழிற்பாட்டு செலவு-சேமிப்பு முன் முயற்சிகள் குறைக்கப்பட்ட தொழிற்பாட்டு செலவுகளுக்குப் பங்களித்ததுடன், ஒட்டுமொத்த இலாபத்தையும் மேம்படுத்தியது. முக்கியமாக வட்டி விகிதக்குறைப்பு காரணமாக நிறுவனம் நிதி செலவில் 27.2% சேமிப்பை மேற்கொள்ள முடிந்தது. இதன் விளைவாக, நிறுவனம் 2023இன் முதல் அரையாண்டின் ரூ.401 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் 2024இன் முதல் அரையாண்டில் ரூ.272 மில்லியன் தேறிய இலாபத்தினை பதிவு செய்தது.



நிறுவனம் எதிர்கால வளர்ச்சி மற்றும் நிலைத் தன்மையை ஊக்குவிக்க அதன் தந்திரோபாய முயற்சிகளை மேம்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்துகிறது. அதிகரித்த செயற்பாட்டுத்திறன் மற்றும் செலவு கட்டுப்பாட்டு நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளுடன்,

SLT-MOBITEL ஆனது வளர்ந்து வரும் போட்டி மிகு சந்தையில் முன்னோக்கிச் செல்லவும் அதன் பங்குதாரர்களுக்குத் தொடர்ச்சியான பேண் தகு வெகுமதிகளை வழங்க தயாராக உள்ளது.

மொபிடெல் நிறுவனமானது, பெறுமதி சேர்வரி 3% அதிகரித்த போதிலும் 2023இன் முதல் அரையாண்டுடன் ஒப்பிடும் போது, 2024இல் முதல் அரையாண்டில் 3.6% வருமான அதிகரிப்பை பேணியுள்ளது. பிரதானமாக அதிகரித்து வரும் broadband சேவைகளுக்கான தேவை மற்றும் சேவை வழங்குதலில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் போன்ற காரணிகளால் இவ்வருமான அதிகரிப்பு அடையப்பட்டது. நிலையான வருமான வளர்ச்சியும் செலவுக்குறைப்பும் இணைந்து 2024இன் முதல் அரையாண்டில் EBITDA, 26%ஆல் வளர்ச்சி அடைந்துள்ளதுடன், இலாபத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது, ஒட்டு மொத்தமாக மொபிடெல், செயற்பாட்டுத்திறன் மற்றும் இலாபத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியது. தொழிற்பாட்டு இலாபம் 2023இன் முதல் அரையாண்டில் ரூ.895 மில்லியன் நட்டத்திலிருந்து 2024இன் முதல் அரையாண்டில் இலாபமாக ரூ.182 மில்லியன் ஆக மாறியது. 2023ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 2024இன் முதல் அரையாண்டில் நட்டமானது 28.9%ஆல் குறைந்துள்ளது.



# பெண்கள் சமத்துவ தினம்



சி.கதீசனா
ஊடகக் கற்கைகள்
யாழ். பல்கலைக்கழகம்



பெண்கள் சமத்துவ தினம் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 26 அன்று நினைவு கூரப்படுகிறது. இது பெண்களின் உரிமைகள் மற்றும் சமத்துவத்திற்கான தற்போதைய போராட்டத்தில் ஒரு முக்கிய தருணத்தைக் குறிக்கிறது. ஆண்டுதோறும் ஆகஸ்ட் 26ஆம் திகதி கொண்டாடப்படும் மகளிர் சமத்துவ தினம் வெற்றி, விடாமுயற்சி மற்றும் சமத்துவத்திற்கான தொடர்ச்சியான போராட்டங்களின் தருணங்களை ஒன்றிணைத்து ஒரு வளமான மற்றும் பன்முக வரலாற்றைக் கொண்டுள்ளது.

அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கிய 19ஆவது திருத்தத்தின் ஒப்புதலை நினைவு கூரும் வகையில் இந்த சிறப்பு நாள் 1971இல் காங்கிரஸால் முதன்முதலில் அறிவிக்கப்பட்டது.

2023ஆம் ஆண்டின் பெண்கள் சமத்துவ தினத்தின் கருப்பொருள் சமத்துவத்தை ஏற்றுக்கொள் என்பது 2021 முதல் 2026 வரையிலான மூலோபாயத் திட்டத்தின் மூலம் எதிரொலிக்கிறது. இந்த தீம் பொருளாதாரம் வளர்ச்சிக்கு மட்டுமல்ல அடிப்படை மனித உரிமையாகவும் பாலின சமத்துவத்தை அடைவதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ஆண்களும் பெண்களும் சமம் என்ற நிலை வரவேண்டும் இன்றுவரை ஏதோ ஒரு காரணம் காட்டி பெண்கள் சமம் அற்றவர்களாகவே கருதப்படுகிறார்கள். பெண்களுக்கு உரிய உரிமைகள் கிடைக்கப் பெற்றாலும் ஆண்களுக்கு நிகராக பெண்களால் வாழ முடியவில்லை. பெண்களுக்கு என ஒதுக்கப்பட்ட நியமங்கள், பாரம்பரிய முறைகள் திணிக்கப்படுகின்றன.

பெண்கள் மீது வன்முறைகள் விதைக்கப்படுகின்றன. இலங்கையில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அரசியலில், அலுவலகங்களில், பொதுப் போக்குவரத்தில், வீதிகளில், வீடுகளில், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்தே வருகின்றன. இதில் எங்கே பெண்கள் சமத்துவம் பேணப்படுகிறது?

தற்காலத்தில் பெண்கள் ஆண்களுக்கு சமமாகப் பல துறைகளில் சாதித்து வந்தாலும், ஆணுக்கு அடுத்த நிலை தான் பெண்கள் என்ற நிலை மாறவில்லை. சமூக மக்களிடையே உள்ள பெண்கள் பற்றிய மாதிரி வார்ப்புகளைக் களைய முடியவில்லை.

கல்வி கற்ற ஒவ்வொரு பெண்ணும் திருமணத்தின் பின் தனக்கென வகுத்துக் கொண்ட கட்டமைப்புகள், வேலைத் தளங்களில் ஆண்களுக்கு கீழே பணியாற்றும் பெண்களின் தன்மை, பொது இடங்களில் பெண்களுக்கு ஏற்படும் வன்முறைகள், தனித்து இயங்க முடியாது என பெண்களை ஓரம் கட்டும் சமூகம், குழந்தைப் பேற்றை மாத்திரம் உயர்த்திப் பேசுதல், இரவு வேளையில் பெண்கள் சமூகத்தில் நடமாட முடியாத நிலை, ஒரு விடயத்தில் பெண்கள் முடிவை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை, முடிவெடுப்பதில் பெண்கள் தயங்கி நிற்கும் நிலை என்பன எங்கே பெண் சமத்துவத்தை ஏற்றுக் கொள்கிறது?

தேசிய கணக்காய்வு அலுவலகம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், பெண்களுக்கு எதிரான வன்முறை குற்றங்கள் 27 வீதத்தால் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெண்கள் பாலியல் துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை 182இல் இருந்து 226 ஆக அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் அறிக்கையில் இலங்கையில் 30 தொடக்கம் 40 சதவீதமான பெண்கள் ஏதாவது ஒரு பாலியல் ரீதியிலான துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தினால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, இலங்கையில் பொது போக்குவரத்து பஸ்கள் ரயில்களில் பயணிக்கும் 90% பெண்களும் சிறுமிகளும் பாலியல் துன்புறுத்துகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் இங்கு எங்கே சமத்துவம் பேணப்படுகிறது?

இலங்கையில் என்னதான் பாலின சமத்துவம் குறித்து உரத்துப் பேசி வந்தாலும், இன்றும் ஒவ்வொரு நாளும் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு நிமிடமும் வார்த்தை வன்முறையினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள், பணியிடத்தில் சம உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள், ஒரு ஆண் இன்னொரு ஆணை வசைபாடும் ஒவ்வொரு வார்த்தையிலும் பெண்கள் அவமானப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அத்துடன், இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமைகளைக் கொண்டு பழைமையான வரலாறு இருந்தும் கூட, இலங்கையில் பெண்களில் அரசியல் பிரதிநிதித்துவம் குறைவாகவே உள்ளது. மிகவும் குறைவான சதவீதமான பெண் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட நாடுகள் என்ற பட்டியல் வழங்கப்பட்டால் இலங்கைக்கு 16ஆவது இடம் கிடைக்கும். ஏனெனில், இப்போது பெண் அதிகாரத்தை அல்லது பெண்களால் நிர்வகிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளாத ஒரு ஆணாதிக்க சமூகத்தின் பிடியில் தான் இலங்கைப் பெண்கள் உள்ளனர்.

இந்த வருட தேர்தலில் படி, கூட 39 வேட்பாளர்களும் எந்த ஒரு பெண் வேட்பாளரும் இல்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். போராட்டங்கள் நடத்தப்பட்டும், கொடிகள் தூக்கப்பட்டும் பெண்ணுரிமை குறித்துப் பேசியும் அவையெல்லாம் அந்த குறிப்பிட்ட நாட்கள், குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரமேயாகும். பெண்களின் சமத்துவம் குறித்து உலக மகளிர் தினங்களில் பேசப்பட்டாலும், பெண்கள் சமத்துவம் பேணப்படுவதில்லை.

வரலாற்றுக் காலத்திலிருந்து இன்று வரை சமத்துவம் குறித்துப் பேசப்பட்டு இலக்கியங்கள் தோன்றி இருந்தாலும், சமத்துவம் பேணப்படவில்லை. பெண்களின் சமத்துவத்தின் முக்கியத்துவம் பற்றிப் பார்க்கும் போது, பெண்களின் சாதனைகளைக் கொண்டாடுதல், தற்போதைய ஏற்ற தாழ்வுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல், செயலில் ஈடுபடுதல் போன்றனவாகும். இனிவரும் காலங்களிலாவது பெண்கள் சமத்துவம் பேணப்பட வேண்டும்.

தங்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டும், வாய்ப்புகள் வழங்க வேண்டும் என அமெரிக்காவில் கிளர்ந்து எழுந்த பெண்களின் வெற்றியை உரக்கச் சொல்வதுதான் 'பெண்கள் சமத்துவ தினம்'. இந்த நாளைத்தான் இத்திங்களன்று, அதாவது ஆகஸ்ட் 26ஆம் திகதி உலக சமத்துவ தினமாகக் கொண்டாடினோம்.

ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டும் என இந்த நாள் வலியுறுத்துகிறது. அதே போல, ஆண்கள் மட்டுமே கோலோச்சிய துறைகளில் பெண்கள் நிகழ்த்திய சாதனைகளையும், போராடிப் பெற்ற வெற்றிகளையும் உலகறிய செய்வதே இந்த மகளிர் சமத்துவ நாளின் முக்கிய நோக்கமாகும்.

**டாக்கா**

### ஆட்சி மாற்றத்துக்கு பின்னரும்

# தொடரும் போராட்டங்கள்



பங்களாதேஷில் பல்வேறு அமைப்புக்கள் ஆங்காங்கே போராட்டங்களில் ஈடுபடுவதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷில் இட ஒதுக்கீடு தொடர்பான விவகாரத்தில் அரசுக்கு எதிராக மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதனால் அங்கு வன்முறையும், கலவரங்களும் வெடித்தன. இதனை கட்டுப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கையில் உயிரிழப்புக்கள் அதிகரித்தன.

இதன் எதிரொலியாக போராட்டம் தீவிரமடைந்த நிலையில், பிரதமர் ஹசினா தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தார். தற்போது அங்கு இடைக்கால அரசு பொறுப்பேற்றுள்ளது.

இந்நிலையில், பல்வேறு அமைப்புக்களால் ஆங்காங்கே போராட்டங்கள், வீதி மறியல் மற்றும் உள்ளிருப்பு போராட்டங்கள் நடத்தப்படுவதால் போக்குவரத்து முடங்கி, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பட்டுள்ளது.

இதற்கிடையே, பங்களாதேஷின் டாக்கா நகரம், போக்குவரத்து நெரிசலில் உலகிலேயே ஐந்தாவது மோசமான நகரமாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பிரான்ஸ்**

# “துரோவ் கைதில் அரசியல் இல்லை”

“டெலிகிராம் தலைமை நிர்வாகி பாவெல் துரோவ் கைது செய்யப்பட்டது, அரசியல் முடிவு இல்லை” என பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் தெரிவித்தார்.

பிரான்சில், போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒன்லைன் குற்றங்களுக்கு டெலிகிராம் செயலி அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருவதாக குற்றச்சாட்டப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டில், அந்த செயலியின் நிறுவனரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான பாவெல் துரோவ் கைது செய்யப்பட்டார்.

துரோவ் கைது செய்யப்பட்டமை தனி மனித சுதந்திரத்தை பாதிக்கிறது. சுதந்திரமான பேச்சுரிமையைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளது என உலகம் முழுவதும் கண்டனம் வலுத்து வருகிறது.

இது தொடர்பாக, இம்மானுவேல் மேக்ரான் எக்ஸ் சமூகவலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “பாவெல் துரோவ் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிரான்ஸ் அரசு தொடர்பாக தவறான தகவல்கள் பரவி வருகிறது.

கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் தொடர்பு ஆகியவற்றை பாதுகாப்பதில், பிரான்ஸ் அரசு அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறது. அது அப்படியே இருக்கும். சட்டத்தின் ஆட்சியால் நிர்வகிக்கப்படும் ஒரு நாட்டில் குடிமக்களைப் பாதுகாப்பதற்கும், அவர்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிப்பதற்கும், நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

முழு சுதந்திரத்துடன், சட்டத்தை அமல்படுத்துவது நீதித்துறையின் கையில் உள்ளது. டெலிகிராம் தலைவர் துரோவ் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடந்து வருகிறது. இது எந்த வகையிலும் அரசியல் முடிவு அல்ல, இந்த விவகாரத்தில் நீதிபதிகள்தான் தீர்ப்பளிக்க வேண்டும்” என குறிப்பிட்டுள்ளார்.



**சென்னை**

# பிஜிலி ரமேஷ் காலமானார்

நகைச்சுவை நடிகர் பிஜிலி ரமேஷ் உடல்நலக்குறைவு காரணமாக செவ்வாய்க்கிழமை (27) சென்னையில் காலமானார்.

யூடியூப் செனல் மூலம் பிரபலமானவர் நடிகர் பிஜிலி ரமேஷ். தொடர்ந்து சினிமாவில் நடிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. இயக்குநர் நெல்சனின் கோலமாவு கோகிலா படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானார்.

‘நட்பே துணை’, ‘ஏ1’, ‘சோம்பி’, ‘நெஞ்சமுண்டு நேர்மையுண்டு ஓடு ராஜா’, ‘பொன்மகள் வந்தாள்’, ‘கோமாளி’, ‘ஆடை’ உள்ளிட்ட பல திரைப்படங்களிலும் நடித்துள்ள இவர், பேசும் போது ‘அதுதான் தவறான விஷயம்’ என்கிற வசனம் இளைஞர்களிடையே வெகு பிரபலமானவர்.



**மசாசூசெட்ஸ்**

### நுளம்புகள் மூலம் பரவும்

# புதிய வகை வைரஸ்



அமெரிக்காவில் மசாசூசெட்ஸ் மாகாணத்தில் நுளம்புகள் மூலம் பரவி வரும் வைரஸ் தொற்றை தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளை அம்மாகண அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

‘EEE’ எனப்படும் ‘Eastern Equine Encephalitis’ வைரஸ் தொற்று மசாசூசெட்ஸ் மாகாணத்தில் பரவத் தொடங்கியுள்ளது. இவை நுளம்புகள் மூலமே பரவுவதால் வீடுகளைச் சுற்றி நீர் தேங்காமல் பார்த்து கொள்ளுமாறு மாகாண சுகாதாரத்துறை மக்களை அறிவுறுத்தியுள்ளது.

மேலும், இரவு நேரங்களில் வாகனங்கள் மூலம் வீதிகள், குடியிருப்பு மற்றும் பூங்காக்களில் நுளம்புகளை அழிக்கும் மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது.

காய்ச்சல், தலைவலி, வாந்தி, வயிற்றுப்போக்கு, வலிப்பு, தூக்கமின்மை போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் ‘EEE’ வைரஸ் தொற்று சோதனை செய்து கொள்ளுமாறு சுகாதாரத்துறை கேட்டுக் கொண்டுள்ளது. இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகளில் 30 வீதமானோர் உயிரிழப்பதாக தரவுகள் தெரிவிப்பதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

**ஜெய்ப்பூர்**

# ரயிலை கவிழ்க்க சதி

ஜோத்பூர் அருகே, ரயிலை கவிழ்க்க தண்டவாளத்தில் சீமெந்து பலகை வைக்கப்பட்டிருந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அகமதாபாத் நகரிலிருந்து ஜோத்பூருக்கு ‘வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்’ எனும் ரயில் 375 பயணிகளுடன் புறப்பட்டது. அதி வேகத்தில் ரயில் சென்று கொண்டிருந்த போது, ஜவாய் பண்ட் மற்றும் பைரோலியா ரயில் நிலையங்களுக்கு இடையேயான தண்டவாள பகுதியில் பெரிய சத்தத்துடன் ஏதோ ஒரு பொருள் மீது மோதியது.

சத்தம் கேட்டு குழப்பமடைந்த ஓட்டுநர்கள், இது குறித்து ரயில்வே உயரதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். மேலும், ரயில் என்ஜின் முன்பகுதியில் சேதம் அடைந்ததாகவும் கூறியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, அங்கு உடைந்த சீமெந்து பலகை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், திட்டமிட்டே, ரயிலை கவிழ்க்க வேண்டும் என்ற நோக்கத்தில் தண்டவாளத்தில் சீமெந்து பலகை வைக்கப்பட்டிருப்பதை அவர்கள் உணர்ந்து. இந்த



விவரத்தை சம்பந்தப்பட்ட ரயில் நிலைய மேலாளர் மற்றும் உயரதிகாரிகள் கவனத்துக்கு கொண்டு சென்றனர்.

உடனடியாக அனைத்தையும் ஆய்வு செய்த உயரதிகாரிகள், தண்டவாளத்தை கவிழ்க்க சதி நடந்திருப்பதை உறுதி செய்து, அதில் சம்பந்தப்பட்ட மர்ம நபர்களை கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்க கோரி பொலிஸில் புகார் அளித்துள்ளனர்.

மிகப்பெரும் சதி வேலைக்கு திட்டமிட்டு தண்டவாளத்தில் சீமெந்து பலகை வைக்கப்பட்டுள்ளதால், சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

**சென்னை**

# “தமிழகம் மீதே கவனம்”

கடல் கடந்து சென்றாலும் கவனமெல்லாம் தமிழ்நாட்டில்தான் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், முதலீட்டாளர்களை சந்திப்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திங்கட்கிழமை (26) சென்னையில் இருந்து அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார். அங்கு மொத்தமாக 17 நாட்கள் தங்கும் அவர், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

இந்நிலையில் அவர், திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில், “அன்னை நிலம் பயன் பெறுவதற்கான பயணங்களில் ஒன்றாக, உங்களில் ஒருவனான நான் அமெரி க்காவுக்குப் பயணிக்கிறேன். அமெரிக்காவில் இருந்தாலும் தமிழ்நாடு பற்றியேதான் என் மனது சிந்திக்கும். பார்வை கண்காணிக்கும்” என்றார்.





### இங்கிலாந்துக் குழாமில்

# பெயார்ஸ்டோ மொயின் இல்லை

அவுஸ்திரேலியாவுக்கெதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான இங்கிலாந்துக் குழாமில் ஜொனி பெயார்ஸ்டோ, மொயின் அலி ஆகியோர் இடம்பெறவில்லை.

இந்நிலையில் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான குழாமில் குஸ் அட்கின்ஸன், ஹரி ப்ரூக், பென் டக்கெட், ஜேமி ஸ்மித், மத்தியூ பொட்ஸ் ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளதுடன், ஜோ றூட்டுக்கு ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான குழாம்: ஜொஸ் பட்லர் (அணித்தலைவர்), ஜொஃப்ரா ஆர்ச்சர், ஜேக்கப் பெதெல், பிறைடன் கார்ஸ், ஜோர்டான் கொக்ஸ், சாம் கர்ரன், ஜொஷ் ஹல், வில் ஜக்ஸ், லியம் லிவிங்ஸ்டோன், சஹிப் மஹ்மூட், டான் மூஸ்லி, அடில் ரஷீட், பில் ஸோல்ட், றீஸ் டொப்லி, ஜோன் டேர்னர்.

ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாம்: ஜொஸ் பட்லர் (அணித்தலைவர்), ஜொஃப்ரா ஆர்ச்சர், குஸ் அட்கின்ஸன், ஜேக்கப் பெதெல், ஹரி ப்ரூக், பிறைடன் கார்ஸ், பென் டக்கெட், ஜொஷ் ஹல், வில் ஜக்ஸ், மத்தியூ பொட்ஸ், அடில் ரஷீட், பில் ஸோல்ட், ஜேமி ஸ்மித், றீஸ் டொப்லி, ஜோன் டேர்னர்.

# மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி சாம்பியன்

■ *அஸ்ஹர் இப்றாஹிம்*

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனம் நடாத்தும் கல்முனை கல்வி மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரில் மருதமுனை அல் மத்திய கல்லூரி சம்பியனானது.

சவளக்கடை அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, பெரியநீலாவனை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயம் உள்ளிட்டவையும் பங்கேற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான இத்தொடரின் இறுதிப் போட்டியில் சொறிக்கல்முனை ஹொலி ஹீரோஸ் வித்தியாலயத்தை வென்றே




அல் மனார் மத்திய கல்லூரி சம்பியனாகி தேசிய மட்டப் போட்டிகளில் விளையாடுவதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

### ராம் கராத்தே சம்மேளன கராத்தே:

# விவேகானந்த பிரகாசித்தது

■ *வ.திவாகரன்*

ராம் கராத்தே சம்மேளனத்தால் தேசிய ரீதியாக அக்கரைப்பற்றில் ஞாயிற்றுக்கிழமை (25) நடாத்தப்பட்ட கராத்தேப் போட்டியில், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கொல்லநுலை விவேகானந்த வித்தியாலய மாணவர்கள் 10 தங்கப் பதக்கங்களையும், 11வெள்ளிப் பதக்கங்களையும் எட்டு வெண்கலப் பதக்கங்களையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.






# கைச்சாத்திட்டார் றயோ வலெக்கனோ

கொலம்பியா சர்வதேச கால்பந்தாட்ட அணியின் தலைவரான ஜேம்ஸ் றொட்றிகாஸைக் கைச்சாத்திட்டதை ஸ்பானிய லா லிகா கழகமான றயோ வலெக்கனோ திங்கட்கிழமை (26) உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த பருவகாலத்தில் பிரேஸிலியக் கழகமான சா போலோவுக்காக 33 வயதான றொட்றிகாஸ் விளையாடியிருந்தார்.

### தேசியத்தில் முதலிடம் பெற்ற

# அர்ஹாமுக்கு பாராட்டு



■ *எம்.யூ.எம்.சனூன்*

அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மல்யுத்தப் போட்டியானது, கண்டியில் நடைபெற்றபோது, நுரைச்சோலை தேசிய பாடசாலையை சேர்ந்த முகம்மது சியாம் முகம்மது அர்ஹம் 71 கிலோ கிராம் எடைப் பிரிவில் போட்டியிட்டு தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் நுரைச்சோலை பாடசாலை வரலாற்றில் விளையாட்டுத் துறையில் முதல் தங்கப்பதக்கம் வென்று ‘தங்க மகன்’ என்ற பெருமையையும் இவர் ஈட்டியுள்ளார்.

இவரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் அதன் அதிபர் எம்.ஐ.எம். இம்ரான்கான் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 28 ஆகஸ்ட் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.